# மத்தேயு

## எழுதின சுவிசேஷத்திலிருந்து கேள்விகளும் பதில்களும்

3



“இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள், அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்’.



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: 61-01-12 *கேள்விகளும் பதில்களும்*
## COD #13

117. **மத்தேயு** 18: 10. (ஒரு சகோதரன் மத்தேயு 18:10ஐப் படிக்கிறார் - ஆசி]. "இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள், அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'.

313. சரி. இப்பொழுது, சகோதரனே, நீங்கள் யாராயிருந்தாலும், பெயர்கள் எழுதப்படுவதில்லை, சிறு காகிதத் துண்டுகள் மாத்திரமே, பாருங்கள், இதைக் கேட்டவர் யாராயிருந்தாலும், நான் நிச்சயமாக

314. இதை நீங்கள் இரண்டு விதங்களில் எடுத்துக் கொள்ளலாம், பாருங்கள். ஆனால் நான் நினைக்கிறேன். இதன் விளக்கம்;

"இதற்கு விளக்கம் தாருங்கள்" என்று என்னைக் கேட் பீர்களானால், இது தான் என் விளக்கம்.

315. இப்பொழுது நீங்கள் 2 கொரிந்தியருக்குத் திருப்புங்கள், யாராகிலும் 5: 1க்குத் திருப்பினால், "பூமிக்குரிய இந்த கூடாரம் அழிந்து போனாலும்" என்று எழுதப்பட்டுள்ளது. அது என்னவென்று உங்களுக்குத் தெரியும். "பூமிக்குரிய இந்த கூடாரம் அழிந்து போனாலும், நமக்காக வேறொன்று ஏற்கனவே காத்திருக்கிறது". சரி.

316. இப்பொழுது அவர் .... நீங்கள் மத்தேயு 18:10ஐக் கவனிப்பீர்களானால் அவர் "சிறு பிள்ளைகளைக் குறித்து இங்கு பேசுகிறார். அவர்கள் சிறு பிள்ளைகள், மூன்று அல்லது நான்கு வயதுள்ளவர்கள், அவர்களைக் கொண்டு வந்தார்கள். "சிறு பிள்ளைகளை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். "சிறு பிள்ளைகள் என்பது “சிறு பிள்ளை" என்பதன் பன்மைச் சொல். சிறு பிள்ளை என்றால் சிறுவன் அல்ல - கைக்குழந்தை அல்ல, அதற்கும் பதின்மூன்று

வயதுக்கும் இடையே உள்ள ஒரு பருவம். பாருங்கள்? அதுதானாக பொறுப்புள்ளதாயிருக்கும் பருவத்தை எட்டவில்லை.

317. அவர், "இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" என்றார். அந்த சொல்லுக்கு உண்மையான அர்த்தம் "மோசமாக நடத்தாதீர்கள்" (mistreat). பாருங்கள், "இவர்களில் ஒருவனை மோசமாக நடத்துதல்" ஒரு சிறு பிள்ளையை நாம் மோசமாக நடத்தக் கூடாது. அவர்கள் சிறு பிள்ளைகள். அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. பாருங்கள்?

318. இப்பொழுது கவனியுங்கள், அவர், "அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்பொழுதும் தரிசிக்கிறார்கள்" என்றார். பார்த்தீர்களா? வேறு விதமாகக் கூறினால், அவர்களுடைய தூதர்கள், அவர்களுடைய சரீரங்கள், அவர்கள் மரித்தால் அவர்கள் செல்லவிருக்கும் அந்த

தூதனைப் போன்ற சரீரங்கள், பரலோகத்தில் என் பரமபிதாவின் சமுகத்தில் எப்பொழுதும் இருக்கின்றன". பாருங்கள்?

319. இப்பொழுது, "பூமிக்குரிய இந்த கூடாரம் அழிந்துபோனாலும் நமக்காக வேறொன்று ஏற்கனவே காத்திருக்கிறது" அது சரியா? அது ஒரு சரீரம்.

320. இங்கு பாருங்கள். இதை விவரிக்க எனக்கு மட்டும் நேரமிருந்தால்! எனக்கு நேரமில்லை என்பதை அறிவேன். ஆனால், 'இங்கே, இதை ஒலிப்பதிவு செய்வதால், இதை சிறிது விளக்குகிறேன், அப்பொழுது நீங்கள் எப்படியும் புரிந்து கொள்வீர்கள்.

321. பாருங்கள், ஒரு இரவு பேதுரு சிறையிலிருந்தான். அவர்கள் மாற்கு என்னும் பெயர் கொண்ட யோவானின் வீட்டில் ஜெபக் கூட்டம் ஒன்றை நடத்திக் கொண்டிருந்தனர். கர்த்தருடைய தூதன் - அந்த அக்கினி ஸ்தம்பம் - சிறைச் சாலைக்குள் வந்தார். ஒரு வெளிச்சம் இறங்கி வந்தது. அந்த ஒளி அவனிடம் வந்த போது.பேதுரு சொப்பனம்

காண்கிறதாக நினைத்தான். அது... வேதம், "அறையிலே வெளிச்சம் பிரகாசித்தது" என்கிறது (அப். 12:7). பாருங்கள்? நம்முடன் இன்றுள்ளவரும் அவரே என்று நான் விசுவாசிக்கிறேன். பாருங்கள், அவர் இறங்கி வந்தார். நாமும் தொல்லையில் அகப்பட்டுக் கொண்டால், அதே விதமாக நமக்கும் நேரிடலாம். பாருங்கள்? அவர் அங்கு வந்து, "என் பின்னே வா" என்றார்.

322. எனவே பேதுரு, "இப்பொழுது நான் சொப்பனம் கண்டு கொண்டிருக்கிறேன், இந்த சொப்பனத்தின் அர்த்தம் என்னவென்று பார்க்கலாம்" என்று எண்ணினான். அவன் காவலாளர்களைக் கடந்து சென்றான். அவன் “உ - ஊ. இப்பொழுது நான் நடந்து கொண்டே செல்கிறேன். கதவுதானாக திறக்கிறதே என்று எண்ணினான். அவன் அடுத்த காவலுக்குச் செல்கிறான், அதுவும் தானாக திறவுண்டது. அவன் நகர வாசலை அடைந்த போது, அதுவும் தானாக திறவுண்டது. பேதுரு சொப்பனம் காண்கிறதாக அப்பொழுதும் நினைத்துக்

கொண்டிருந்தான். அவன் அங்கு நின்ற போது, "நல்லது. இப்பொழுது நான் விடுதலையாகி விட்டேன். எனவே நான் மாற்கு என்னும் பெயர் கொண்ட யோவான் வீட்டுக்குச் சென்று அங்கு ஐக்கியத்தில் கலந்து கொள்வேன்" என்றான்.

323. அவர்கள் அங்கு, "ஓ கர்த்தாவே, உமது தூதனை அனுப்பி பேதுருவை விடுவியும்" என்று ஜெபித்துக் கொண்டிருந்தனர்.

324. ஏறக்குறைய அதே நேரத்தில் யாரோ தட்டும் சத்தம் கேட்டது. சகோ. பிரான்ஹாம் தட்டுகிறார் - ஆசி]. ஒரு பெண் கதவண்டையில் வந்து, "யார் அங்கே? என்று கேட்டாள். அவள் ஜன்னல் சட்டங்களைத் திறந்து பார்த்த போது அது பேதுரு என்று அறிந்து கொண்டாள். அவள் திரும்பிச் சென்று நீங்கள் ஜெபம் பண்ணுவதை நிறுத்திக் கொள்ளலாம், பேதுரு அங்கு நின்று கொண்டிருக்கிறார்" என்றாள்.

அவன், "இது என்ன! திறவுங்கள். நீங்கள் - நீங்கள்...' என்றான். பாருங்கள்?

325. [சகோ. பிரான்ஹாம் மறுபடியும் தட்டுகிறார் - ஆசி]. அவன் "கதவைத் திறவுங்கள், நான் உள்ளே வர வேண்டும்" என்றான். எனவே அவன் சொன்னான் ....அவள் திரும்பவும் வந்து, "கதவண்டையில் நின்று கொண்டிருப்பவர் பேதுருதான்" என்று சாதித்தாள்.

326. அவர்கள், "ஓ, அவர்கள் பேதுருவை ஏற்கனவே சிரச்சேதனம் செய்து விட்டார்கள். அது அவருடைய தூதன்" என்றனர். பாருங்கள், பூமிக்குரிய இந்த கூடாரம் அழிந்த போது, அவன் அதை பெற்றுக் கொண்டான் என்று அவர்கள் எண்ணினர். ஏனெனில் அவன் வருவதற்காக அது பரலோகத்தில் காத்திருந்தது.

327. அன்றொரு நாள் நான் கடந்து சென்று அந்த தரிசனத்தைக் கண்டேன். "பூமிக்குரிய இந்த கூடாரம் அழிந்து போனால், நமக்கு வேறொன்று இருக்கிறது".

328. இந்த சிறுவர்கள் பாவமே செய்யாதவர்கள், பாருங்கள் ... பாருங்கள்?

329. ஒரு குழந்தை அதன் தாயின் கர்ப்பத்தில் உருவாகிக் கொண்டிருக்கும் போது, அது அங்கு வைக்கப்பட்ட வுடன் ... பாருங்கள்? பாருங்கள்? ஆனால், அது முதலில் ஆவியாயுள்ளது. அந்த ஆவி மாம்சத்தை தரித்துக் கொள்ளும் போது, ஒரு சிறு ஜீவகிருமி மாம்சத்தைத் தரித்துக் கொண்டு, அதன் தாயின் கர்ப்பத்திலிருந்து வெளியே வரும் போது... கர்ப்பத்தில் அது உதறுகின்றது. குலுக்குகின்ற சிறு தசைகளைக் கொண்டதாயுள்ளது. அது நமக்குத் தெரியும். அவை ஜீவ அணுக்கள். ஒரு குதிரை மயிரை நீங்கள் தண்ணீரில் போட்டால், அது மிதக்கி, அசைந்து கொண்டிருக்கும். அதை நீங்கள் தொடும் போது அது குதிக்கும். அப்படித் தான் தாயின் வயிற்றிலுள்ள ஒரு குழந்தையும் உள்ளது.

330. ஆனால் அது இந்த உலகத்தில் பிறந்து அதன் முதல் சுவாசத்தை சுவாசிக்கும் போது, அது ஜீவாத்துமாவாகிறது.

பாருங்கள்? ஏனெனில் பூமிக்குரிய சரீரம் இவ்வுலகில் பிறந்தவுடனேயே, அதை ஏற்றுக் கொள்ள வானத்துக்குரிய ஒரு சரீரம், ஆவிக்குரிய சரீரம் ஒன்றுள்ளது. மாம்சத்துக்குரிய சரீரம் விழுந்தவுடனே, அதற்காக பரலோக கூடாரம் ஒன்று காத்திருக்கிறது. பூமிக்குரிய இந்த கூடாரம் அழிந்து போனால் அதற்காக பரலோக கூடாரம் ஒன்று காத்திருக்கிறது. ஒரு குழந்தை பூமிக்கு மாம்சத்தில் வந்தவுடனே, அதை ஏற்றுக் கொள்ள ஆவிக்குரிய சரீரம் ஒன்று காத்திருக்கிறது. இந்த ஆவிக்குரிய சரீரம்...மாம்சத்துக்குரிய சரீரம் அழிந்து போனவுடனே, ஆவிக்குரிய சரீரம் ஒன்று மறுபுறத்தில் காத்திருக்கிறது. பாருங்கள்? அதை நாம் 'தியாஃபனி' (theophany) என்று அழைக்கிறோம், பாருங்கள், தியாஃபனி.

(ஒரு சகோதரன், "**நல்லது, அப்படியானால், இந்த சரீரம் உயிர்த்தெழும் வரைக்கும், அது ஒரு தற்காலிகமான சரீரமா?** என்று கேட்கிறார் - ஆசி]. ஆம், பாருங்கள்?

ஆம். ஓ, ஆமாம். ("**உயிர்த்தெழுதல் வரைக்கும் அந்த நிலையில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருப்போமா?**] அது சரி. பாருங்கள்? பாருங்கள்?

331. அது இன்னும் மனுபுத்திரருக்கு வெளிப்படவில்லை. நான் நினைக்கிறேன். அதை நான் கண்டேன் என்று எனக்குத் தெரியும். பாருங்கள்? ஆனால் அது என்ன விதமான சரீரம் என்று எனக்குத் தெரியவில்லை, உங்கள் கைகளையும் மற்ற உறுப்புகளையும் உணர முடிவதைப் போல அவர்களையும் என்னால் தொட்டு உணர முடிந்தது. இது ஒலிநாடாவில் பதிவு செய்யப்படுகிறது. நான் உலகத்தை விட்டுச் சென்று அநேக ஆண்டுகள் கழித்தும் இதை நீங்கள் போட்டுக் கேட்க வகையுண்டு. பாருங்கள்? ஆனால்... அது என்னவாயிருப்பினும், அந்த ஜனங்களை நான் தழுவினேன், அவர்கள் கைகளைப் பிடித்தேன். நீங்கள் தத்ரூபமாயிருப்பது போல் அவர்களும் தத்ரூபமாயிருந்தனர்.

இருப்பினும் அது .... அவர்கள் புசிக்கவில்லை, குடிக்கவில்லை, அங்கு நேற்று என்றோ நாளை என்றோ இருக்கவில்லை. பாருங்கள், அது நித்தியம்.

332. இப்பொழுது, அந்த கூடாரம் ... அவர்கள் அந்த சரீரத்தில் புறப்பட்டு, பூமிக்குத் திரும்ப வருகின்றனர், அந்த விதமான சரீரத்தில் அவர்கள் அழியாமையைப் பெற்றிருந்தனர். பூமியின் மண்ணானது எப்படியோ அந்த 'தியாஃஃபனியாக ஒன்று கூடி, அவர்கள் மீண்டும் மானிடராக, ஏதேன் தோட்டத்தில் அவர்கள் புசித்ததைப் போல் புசிக்கின்றனர். பாருங்கள்? "பூமிக்குரிய இந்த கூடாரம் அழிந்து போனாலும், நமக்காக ஒன்று ஏற்கனவே காத்திருக்கிறது.

333. எனவே பாவமே இல்லாத இந்த சிறு பிள்ளைகள் - அவர்களுக்கு இன்னும் பாவம் இருக்கவில்லை - அவர்களுடைய தூதர்கள், அவர்களுடைய "சரீரங்கள்" (பேதுரு அந்த சரீரத்தில் திரும்பி வந்ததாக கருதப்பட்டான்...) காத்திருக்கின்றன.

"பரலோகத்தில் பரம பிதாவின் சமுகத்தை தரிசித்தவைகளாய்" அவைஎப்பொழுதும் அவருடைய சமுகத்தில் உள்ளன. அவர்கள் அதை அறிந்திருக்கின்றனர்.

334. ஒரு சகோதரன், "இயேசு அவருடைய உயிர்த்தெழுதலின் முதலாம் கட்டத்தில் 'என்னைத் தொடாதே. நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறப் போகவில்லை' என்று சொல்லிவிட்டு அதன் பிறகு அறைக்குள் வந்தபோது தோமாவிடம் 'உன் கையை நீட்டி என் விலாவிலே போடு' என்று சொன்னதைப் புரிந்து கொள்ள சிறிது கடினமாயுள்ளது என்கிறார் - ஆசிர. அது உண்மை . அவர் இன்னும் ஏறிப் போகவில்லை. ("ஓரிடத்தில் அவர், அவரைத் தொட வேண்டாம் என்று சொல்லிவிட்டு, தோமாவிடம் அருகில் வந்து அவரைத் தொடும்படி சொல்லுகிறாரே, இவ்விரண்டிலும் வேறுபாடு காணப்படுகிறதே). அவர் இன்னும் ஏறிப் போகவில்லை, பாருங்கள். நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப் போகவில்லை)

335. அது உண்மை, பாருங்கள், அது வரைக்கும் அவர் தொடப்படக் கூடாது. அவருடைய உயிர்த் தெழுதலுக்குப் பின்பு. அவர் கல்லறையிலிருந்து வெளியே வந்து மனிதர் மத்தியில் நடமாடிக் கொண்டிருந்தார், அவர் இன்னும் ஏறிப் போகவில்லை. அவர் சொன்னார். அவர் மரியாளிடம், "என்னைத் தொடாதே" என்றார்.

அவள், "ரபூனி" என்றாள்.

336. அவர், "என்னைத் தொடாதே. நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப் போகவில்லை. நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும் என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப் போகிறேன்" என்றார்.

337. அதன் பிறகு அன்றிரவு - அவர் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்த பிறகு - தேவனுடைய சமுகத்துக்கு ஏறிப் போனார். அங்கிருந்து திரும்பி வந்து, அவரைத் தொடும்படி தோமாவை அழைத்தார்.

பாருங்கள், அவர் தேவனிடத்திற்கு ஏறிப் போனார். அது உண்மை. சரி.



மனித உடலில் அழிவு எழுபத்திரண்டு மணி நேரத்தில் உண்டாகிறது. எனவே இரவும் பகலும் மூன்று நாட்களுக்குள் எப்பொழுதாவது அவர் கல்லறையை விட்டு வெளி வர வேண்டும்.



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: 64-08-23E கேள்விகளும் பதில்களும் COD #21

315. **சகோ. பிரான்ஹாமே, மத். 12:40ல், "யோனா இரவும் பகலும் மூன்று நாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷ குமாரனும் இரவும் பகலும், மூன்று நாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்" என்று கூறப்பட்டுள்ளதே, அப்படியிருக்க, அவர் கல்லறையில் வெள்ளிக்கிழமை மாலையில் வைக்கப்பட்டு ஞாயிறு காலையில் உயிர்த்தெழுந்தார் என்று அவர்கள் எப்படி கூற முடியும்? அந்த கணக்குப்படி இரண்டு இரவுகளும் ஒரு பகலும் தான் ஆகின்றதே?**

205. நீங்கள் கவனிப்பீர்களானால் "போல" (பாருங்கள்?) என்று கூறப்பட்டுள்ளது. "யோனா இரவும் பகலும்

மூன்று நாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல... அது மூன்று பகல்கள் மூன்று இரவுகளுக்குள்ளாக இருக்க வேண்டும், ஏனெனில் வேத வசனத்தை பொய்யுரைக்க வைக்க உங்களால் முடியாது."அவருடைய ஆத்துமாவை பாதாளத்தில் விடேன்; என்னுடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டேன்" என்று தீர்க்கதரிசி கூறியிருக்கிறான் (சங். 16:10).

மனித உடலில் அழிவு எழுபத்திரண்டு மணி நேரத்தில் உண்டாகிறது. எனவே இரவும் பகலும் மூன்று நாட்களுக்குள் எப்பொழுதாவது அவர் கல்லறையை விட்டு வெளி வர வேண்டும்.

206. எனவே இரவும் பகலும் மூன்று நாட்கள் என்றால் சரியாக அப்படியே என்று அர்த்தமல்ல; அது இரவும் பகலும் மூன்று நாட்களுக்குள்ளாக எப்பொழுதாவது, அதற்குள் அவர் உயிரோடெழுந்து வெளி வர வேண்டும், ஏனெனில் தீர்க்கதரிசனம் பொய்யாயிருக்க முடியாது. அவர் அழிவைக்

காண முடியாது. அவர் சரியாக அந்த நேரம் வரைக்கும் தங்கியிருந்தால், அது அழிவைக் கண்டிருக்கும்.



சகோ. பிரான்ஹாமே, உங்களுக்கு நேரமிருந்தால் மத். 10:41ஐ தயவு கூர்ந்து விளக்கவும். தீர்க்கதரிசிக்கேற்ற பலன் என்னவென்று அறிய விரும்புகிறேன்.



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: 64-08-23E கேள்விகளும் பதில்களும் COD #21

321. **சகோ. பிரான்ஹாமே, உங்களுக்கு நேரமிருந்தால் மத். 10:41ஐ தயவு கூர்ந்து விளக்கவும். தீர்க்கதரிசிக்கேற்ற பலன் என்னவென்று அறிய விரும்புகிறேன்.**

220. நல்லது. இயேசு, "தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக் கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான் என்றார் (ஆங்கிலத்தில்"Prophet's reward", அதாவது "தீர்க்கதரிசி அளிக்கும் பலன்" என்றுள்ளது - தமிழாக்கியோன்). தீர்க்கதரிசி அளிக்கும் பலன், தீர்க்கதரிசியின் நண்பராயிருப்பதே.

நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக் கொள்ளுகிறவன் நீதிமானுக்கேற்ற பலனை அடைவான். அது சரியா?

தீர்க்கதரிசியின் பலன் என்னவென்று அவர்கள் அறிய விரும்பினால், அது தீர்க்கதரிசியின் நண்பராயிருப்பதே, பாருங்கள்? அது ஒரு பலன். அவர் உங்கள் நண்பர்.

221. சூனேமியாளைப் போல, அது எப்பொழுதாவது உபயோகப்படும் பாருங்கள்? அது அவளுக்கு உபயோகமாயிருந்தது. பாருங்கள்? தேவனுடைய ஊழியக்காரரை கவனியுங்கள்.

ஓ, என்னே! இப்பொழுது, நாம்... நான் முடிக்க வேண்டும், நண்பனே, அவ்விதம் செய்ய எனக்கு பிரியமில்லை, ஆனால் இங்கு பாருங்கள், நூற்றுக்கணக்கான கேள்விகள் (சபையோர், மேலும் கேள்விகளுக்கு பதிலளிக்க, சகோ. பிரான்ஹாமை கேட்டுக் கொள்கின்றனர் - ஆசி). இல்லை! ஆனால், பாருங்கள். அவ்விதம் கூறினதற்காக உங்களை நான் நேசிக்கிறேன், ஆனால் இன்றிரவு நூற்றுக் கணக்கான மைல்கள் காரோட்டி செல்ல வேண்டிய இந்த ஏழை

மக்களை எண்ணிப் பார்க்கிறேன். என்ன, அநேக கேள்விகள் இங்குள்ளன. .



மத்தேயு 22:11ல் உள்ள மனிதன் யாரென்பதை விளக்கமாய்க் கூறுங்கள் - அதாவது கலியாண வஸ்திரம் தரிக்காத மனிதன்..... கல்யாண வஸ்திரமில்லாமல் இந்த மனிதன் பரலோகத்திற்குச் செல்ல முடியாது என்று நானறிவேன். அவன் விருந்தாளியென்று எனக்குத் தெரியும்: மணவாட்டியல்ல.



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## செய்தி: 63-03-24 M முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும் COD #18

**203. சகோதரன் பிரான்ஹாமே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துதல்கள். மத்தேயு 22:11ல் உள்ள மனிதன் யாரென்பதை விளக்கமாய்க் கூறுங்கள் - அதாவது கலியாண வஸ்திரம் தரிக்காத மனிதன்..... கல்யாண வஸ்திரமில்லாமல் இந்த மனிதன் பரலோகத்திற்குச் செல்ல முடியாது என்று நானறிவேன். அவன் விருந்தாளியென்று எனக்குத் தெரியும்: மணவாட்டியல்ல.**

324. ஆம் அது சரி, அவன் என்ன நடக்கின்றதென்பதைக் காண மெல்ல உள்ளே நழுவிச் சென்றான். பாருங்கள்? கவனியுங்கள், அதைக் குறித்து ஒரு முழு பிரசங்கமே செய்யலாம்.

வியாதியஸ்தர்களுக்கு ஜெபம் செய்து முடிக்க எனக்கு பத்து நிமிடங்கள் மாத்திரமேயுள்ளது. நான் இன்னும் கேள்விகளில் பாதிகூட முடிக்கவில்லை. கவனியுங்கள். இந்த கேள்விகளுக்குப் பின்பு மற்றெல்லாவற்றையும் துரிதமாக முடிக்கப் போகின்றேன். பாருங்கள்?

325. இதுதான் நடந்தது, நீங்கள் கிழக்கத்திய நாடுகளின் பழக்க வழக்கங்களை அறிந்திருப்பீர்களானால், பாருங்கள்? ஒரு மணமகன் தன் விவாகத்திற்காக அநேக அழைப்புகளை அனுப்புகிறான். அவன் அனுப்பியுள்ள ஒவ்வொரு அழைப்பிற்கும், அவன் ஒரு ஆளை ஒரு அங்கியுடன் கதவண்டையில் நிற்கச் செய்கிறான் அழைப்புக்கிணங்கி வருபவர்கள் யாராயிருந்தாலும், அவர்கள் ஏழையாயிருந்தாலும், பணக்காரராயிருந்தாலும், யாராயிருந்தாலும் அவர்கள் அனைவருமே அந்த கலியாண வஸ்திரத்தை தரித்துக் கொள்ளவேண்டும்.

326. அந்த ஆட்கள் கதவண்டையில் நின்றுகொண்டு, கலியாணத்துக்கு வருபவர்களுக்கு அங்கியை உடுத்துவித்தனர். அவனுடைய வெளிதோற்றத்தை அது மறைத்து. அவன் கோடீசுவரனாக இருந்தாலும் சரி, ஒன்றுமேயில்லாத மிகவும் ஏழ்மையானவனாக இருந்தாலும் சரி, விவசாயியாக இருந்தாலும் சரி, குழி வெட்டுபவனாயிருதாலும் சரி, இராஜகுடும்பத்து தனவந்தனாயிருந்தாலும் சரி (Plutocrat) அவர்களெல்லாரும் அந்த அங்கியை அணிந்தவராக இருந்தனர். வாசலில் நுழையும் முன்பு, அது அவனுக்கு அணிவிக்கப்படுகிறது.

327. இப்பொழுது யோவான் 10-ம் அதிகாரத்தைப் பாருங்கள், அந்த அதிகாரம்தான் என்று நினைக்கிறேன். "நானே வாசல்" என்று அவர் அங்கு கூறியுள்ளார். பாருங்கள்? (யோவான் 10:9) "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால்..." கலியாணத்திற்கு வருபவன் வாசலண்டை நிற்கிறான். அங்குள்ள மனிதன் அவனுக்கு

அங்கியையபரிசுத்த ஆவியை - அணிவிக்கிறான். அவன் நுழையும்போது நீதியின் வஸ்திரத்தை அவனுக்குத் தருகிறான்.

328. இப்பொழுது நாம் சிந்தித்துக் கொண்டிருக்கும் மனிதன் ஏதோ ஒரு ஸ்தாபனத்தை சேர்ந்தவன். அவன் பக்கவழியாக நுழைந்துஜன்னலின் வழியாகவோ அல்லது நுழையக்கூடிய ஒரு துவாரத்தின் வழியாகவோ நுழைந்து - மேசையை அடைந்து அங்கு உட்கார்ந்துவிட்டான். மணவாளன் இங்கு வந்து சுற்றும் முற்றும் பார்த்தபோது... வித்தியாசமான வாத்துக்கள் முன்புண்டாயிருந்தன. இப்பொழுது இவன் வித்தியாசமான வாத்தாக இருக்கிறான். பாருங்கள்? "பரிசுத்த ஆவியின் அபிஷேகம், இன்னும் மற்றவை, இல்லாமல் இங்கு என்ன செய்துக் கொண்டிருக்கிறாய்? நீ எப்படி உள்ளே வந்தாய்?'' என்று கேட்கிறான். எப்படியோ அவன் பக்கவழியாக நுழைந்து வந்தான். சரியான அழைப்பில்லாமல் அவன் வந்துவிட்டான். பாருங்கள்? அவன்

கல்விமுறை போன்ற வழியில் வந்து உள்ளே நுழைந்துவிட்டான்.

329. "அவனைக் கட்டிக்கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள்'' என்று அவர் கட்டளையிட்டார். பாருங்கள்? அவன் உபத்திரவகாலத்திற்குள் சென்று விடுகிறான். பாருங்கள்? அவன் வாசலின் வழியாக உட்பிரவேசிக்கவில்லை. ஆகவே, சரி. கேள்வி:



விசுவாச அறிக்கையில் அவர்கள், "மூன்று நபர்களில் இருக்கின்ற, நித்தியமானவராகிய, ஒரே தேவனில் நாங்கள் விசுவாசம் கொண்டிருக்கிறோம். மத்தேயு 28: 19, 18 மற்றும் 19; ஒன்று... கொரிந்தியர் 13:14 " இது மூன்று நபர்களுக்கு பதிலாக மூன்று அலுவல்களாக இருக்க வேண்டுமல்லவா?"



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

**செய்தி: 61-07-23E *தேவன் தவறாகப் புரிந்து கொள்ளப்படுதல்* COD #14**

135. ***விசுவாச அறிக்கையில் அவர்கள், "மூன்று நபர்களில் இருக்கின்ற, நித்தியமானவராகிய, ஒரே தேவனில் நாங்கள் விசுவாசம் கொண்டிருக்கிறோம். மத்தேயு 28: 19, 18 மற்றும் 19; ஒன்று... கொரிந்தியர் 13:14 " இது மூன்று நபர்களுக்கு பதிலாக மூன்று அலுவல்களாக இருக்க வேண்டுமல்லவா?"***

41. நீங்கள் சரியாக உள்ளீர்கள். தேவத்துவத்தில் மூன்று நபர்கள் கிடையாது. ஒரு நபராயில்லாமல் ஒரு தனிமனித பண்பு இருக்க முடியாது, ஒரு நபர் தான் அவ்வாறு தனிப்பட்ட பண்பைக் கொண்டிருக்க முடியும். மூன்று தேவர்கள் என்பது கிடையாது. ஒரேயொரு தேவன் தான் இருக்கின்றார், அந்த தேவன் இயேசு கிறிஸ்துவே. இயேசு

கிறிஸ்துவில் வாசம் செய்யும் தேவனுடைய ஆவியே தேவன், அவர் தம்முடைய சபையில்(நீங்களும் நானும்) இன்றைக்கு வாசம் செய்து, சர்வவல்லமையுள்ள தேவனாகிய உனக்குள் வாசம் செய்கின்ற அவர் தாமே, நமக்கு தம்மையே பரிசுத்த ஆவியின் வடிவில் பிரித்து வைக்கின்றார்.

42. இப்பொழுது நீங்கள் சரியாக இருக்கிறீர்கள், "பிதா, குமாரன் பரிசுத்த ஆவி'', என்பது அதே தேவனுடைய மூன்று அலுவல்களாகும். ஆனால், மூன்று தேவர்கள் அல்ல, அது வேதபூர்வமாக தவறானதாகும்.



# சகோதரன் பில் மத்தேயு 19:9ல் காணப்படுகின்ற வேசித்தனம் மற்றும் விபச்சாரம் இவைகளுக்கு உள்ள வித்தியாசம் என்ன?



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: 59-06-28E கேள்விகளும் பதில்களும் COD #10

91. **சகோதரன் பில் மத்தேயு 19:9ல் காணப்படுகின்ற வேசித்தனம் மற்றும் விபச்சாரம் இவைகளுக்கு உள்ள வித்தியாசம் என்ன?**

185. மத்தேயு 19:9ல், இயேசு, "ஆதலால், எவனாகிலும் தன் மனைவி, வேசித்தனம் செய்த காரணத்தினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளி விட்டு, வேறொருத்தியை விவாகம் பண்ணினால், விபாரஞ்செய்கிறவனாயிருப்பான்" என்று கூறினார். வேசித்தனம் மற்றும் விபச்சாரம் என்பதற்கிடையேயுள்ள வித்தியாசத்தைப் பொறுத்தமட்டில், இந்த வார்த்தையை எப்படி வேண்டுமானாலும் பொருத்தலாம். ஆனால் அவர் அங்கே எதைக் குறித்து பேசுகிறார் என்பதைத் தெளிவாக பார்ப்போமானால்,

திருமணமாகாத ஒரு பெண்ணால் விபச்சாரம் செய்ய முடியாது, ஏனென்றால், அவளுக்கு புருஷன் இல்லாமல் இருப்பதால் அவனுக்கு மாறாக அவளால் விபச்சாரம் செய்வதற்கில்லை. ஆனால் அது அவளுக்கோ ஒரு அசுத்தமான ஒன்றாகும். அவள் அவ்விதமாகச் செய்திருந்தால், அதை அவள் புருஷனுக்கு, அவர்கள் இருவரும் விவாகமாவதற்கு முன்னதாகவே அவள் அறிக்கை செய்ய வேண்டும். அப்படி செய்யாதிருக்கும் பட்சத்தில், அவளுடைய புருஷனுக்கு பின்னர் அது தெரியவருமானால், அவளை தள்ளிவிட அவனுக்கு உரிமை உள்ளது, ஏனெனில் அவள் ஒரு பொய்யான வாக்கை செய்தவளாகக் காணப்படுகிறாள். ஏனெனில் வேதாகமம் கூறுகிறது, "இது... இல்லை வழக்கம் கூறுகிறது, "இது உங்களுக்கு நன்றாக அறியப்படுவதாக (எனக்கும் அவ்வாறு தான் செய்யப்பட்டது) தேவனுடைய வார்த்தையின் பிரமாணம் அனுமதிக்கும் விதத்தைத் தவிர அதற்கு

மாறாக தம்பதிகள் இணைக்கப்படுவார்களாயின், அவர்களுடைய விவாகம் சட்டப் பூர்வமான ஒன்றல்ல. இருதயத்தின் அந்தரங்கங்கள் எல்லாம் பகிரங்கமாக வெளிப்படத்தப்படப்போகின்ற அந்த நியாத்தீர்ப்பின் நாளிலே பதிலளிக்கப்போகிற உங்கள் இருவருக்கும் நீங்கள் செய்ய வேண்டியதென்ன என்று நான் கட்டளையிடுகிறதாவது, சட்டப்படியாக நீங்கள் இணைக்கப்படக்கூடாது என்று உங்கள் இருவருக்கும் ஏதாவது தடை இருக்குமானால் இப்பொழுதே அதை நீங்கள் அறிக்கையிடுங்கள்" உங்களுக்கு புரிகின்றதா. பாருங்கள்?

186. ஆதலால் வேசித்தனம் என்பது ஒரு இளம்பெண் அசுத்தமான ஜீவியம் செய்வாளெனில், அது தான் வேசித்தனமாகும், ஏனெனில் அவளுக்கு புருஷன் இல்லை. ஆனால் அவளுக்கு விவாகமாகி, பிறகும் அதே விதமாகவே

அவள் ஜீவிப்பாளெனில், அவள் தன் புருஷனுக்கெதிராக விபச்சாரம் செய்கிறாள்.

187. சில காலத்திற்கு முன்னர் ஒரு பெண் என்னிடம் வந்து, "ஓ, நான் எல்லாவற்றையும் அறிக்கை செய்து விட்டேன்'' என்றாள். அவள் மிகவும் பதற்றம் கொண்டவளாக நரம்புத்தளர்ச்சி கொண்டிருந்தாள், “அதைக் குறித்த எல்லாவற்றையும் தேவனிடம் அறிக்கை செய்து விட்டேன்'' என்றாள்.

188. நான், "நீ அதை உன் புருஷனிடம் அறிக்கையிட வேண்டும். நீ தேவனுக்குகெதிராக விபச்சாரம் செய்யவில்லை; உன் புருஷனுக் கெதிராகத்தான் விபச்சாரம் செய்தாய்'' என்றேன். அது சரி.

189. ஆகவே ஒரு மனிதன் ஒரு பெண்ணை விவாகம் செய்யுமுன், அந்தப் பெண்ணோ அவனை விவாகம் செய்யும் முன்னர் அசுத்தமான ஜீவியம் செய்து, பிறகு அவள் அவனிடம் வந்து திருமணம் செய்து

நீண்ட காலம் சென்று பிறகு அவள் அவனிடம் "உங்களிடம் ஒன்றை நான் கூற விரும்புகிறேன். நான் வேறொரு மனிதனுடன் வாழ்ந்து திரிந்து கொண்டிருந்தேன், உங்களிடம் நான் கூறவில்லை'' என்று கூறுவாளானால், அவன் அவளைத் தள்ளி விட்டு வேறொருத்தியை விவாகம் செய்ய இவனுக்கு உரிமையுண்டு என்று இயேசு கூறினார், ஏனெனில் துவக்கத்திலேயே இவர்களுக்கு விவாகமாகவில்லை, ஏனெனில் அவனுக்கு எதிராக ஒரு - ஒரு பொய்யை வஞ்சகமாக கூறியிருந்தாள்.

இப்பொழுது, வேறொரு கேள்வி இங்கேயிருக்கிறது... உங்களுக்கு நன்றி.



# சகோ.பிரான்ஹாமே, இயேசு மத்தேயு 12ம் அதிகாரம், 32ம் வசனத்தில், "எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை' என்று கூறியுள்ளதன் அர்த்தம் என்ன?



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# செய்தி: 64-08-23E கேள்விகளும் பதில்களும் COD #21

296. **சகோ.பிரான்ஹாமே, இயேசு மத்தேயு 12ம் அதிகாரம், 32ம் வசனத்தில், "எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை' என்று கூறியுள்ளதன் அர்த்தம் என்ன? இந்த வேத வசனத்தை எனக்கு தயவுகூர்ந்து விளக்கித் தரவும். நன்றி.** அந்த மனிதனின் பெயரை அது கொண்டுள்ளது; அவர் ஒரு ஊழியக்காரரர். சரி.

149. சகோதரனே, நான் - நீங்கள் ஒரு வேதசாஸ்திர பண்டிதர், நான் வேத சாஸ்திர பண்டிதன் அல்ல. ஆனால் இதை நான் கூற விரும்புகிறேன். இயேசு, "எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால்

அது அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை" என்று கூறியுள்ளார். வேறு சொற்களில் கூறுவோமானால், வேத வாக்கியங்களுடன் அதை இணைத்து பார்ப்போமானால், "மனிதனுக்கு எல்லாவிதமான பாவங்களும் மன்னிக்கப்படும், ஆனால் பரிசுத்த ஆவிக்கு விரோதமான தேவ தூஷணம் சொல்லுதல் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை." பரிசுத்த ஆவிக்கு விரோதமாக தேவ தூஷணம் சொல்லுதல் என்பது, அதை பரிகாசம் செய்தல், அதைக் குறித்து பேசி. கேலி செய்தல். அவ்விதம் ஏதாவதொன்றைச் செய் யும் போது, சரியானதற்கும் தவறானதற்கும் இடையே உள்ள கோட்டை நீங்கள் தாண்டி விடுகிறீர்கள்.

150. இப்பொழுது, நீங்கள் பரிசுத்த ஆவியைக் காண்பீர்களானால்... உதாரணமாக, பரிசுத்த ஆவி இங்கு இறங்கி வந்து வழக்கம் போல சிந்தனைகளைப் பகுத்தறிகிறார் என்று வைத்துக் கொள்வோம். அது பரிசுத்த ஆவியாக இருந்து, அதை நீங்கள் விசுவாசிக்காமல், நீங்கள் வெளியே

சென்று அதை கேலி செய்து, அதைக் குறித்து பேசுவீர்களானால், நீங்கள் என்ன செய்தாலும் எனக்குக் கவலையில்லை, நீங்கள் முடிந்து விட்டீர்கள். நீங்கள் அதை செய்யக் கூடாது. நீங்கள் தேவனால் உண்டாயிருக்கவில்லை என்பதை அது அங்கேயே நிரூபித்து விடுகிறது, ஏனெனில் தேவனுடைய வித்து மனிதனில் தங்கியிருக்கும் போது, அவனால் பாவம் செய்ய முடியாது. பாவம் என்றால் என்ன? அவிசுவாசம். வார்த்தை வெளிப்படுவதை அவன் காணும் போது, அவன் அதை விசுவாசிப்பான். அவனால் ஒன்று மட்டுமே...

151. பாருங்கள், ஒரே ஒரு பாவம் தான் உள்ளது, ஒரே ஒரு பாவம். எத்தனை பேருக்கு அது தெரியும்? அது அவிசுவாசம். அது உண்மை . விபச்சாரம் செய்தல் பாவம் அல்ல, சிகரெட்டு புகைத்தல், பொய் சொல்லுதல், சபித்தல் இவை பாவம் அல்ல. இவை அவிசுவாசத்தின் தன்மைகள் (attributes). நீங்கள் அதை செய்யும் காரணம், நீங்கள் விசுவாசி அல்ல என்பதனால். அது

உண்மை.எனவே, பாருங்கள், ஒரே ஒரு பாவம் உண்டு, அதுதான் அவிசுவாசம். “விசுவாசியாதவனோ ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று" (யோவான் 3:18). அவன் என்ன செய்த போதிலும், அவன் தொடக்கத்திலேயே ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்பட்டுவிட்டான். சரி.



சகோ. பிரன்ஹாம்:

நான் – நான் இதை பயபக்தியோடு கூறுகிறேன். ஒரு ஏழை மனிதனாய் இருப்பதையே நான் மிகவும் விரும்புகிறேன். நான் ஒரு கோடீஸ்வரனாக இருக்க வேண்டுமென்று விரும்பியிருந்தால், அவ்வாறு இருந்திருக்க முடியும்.

And I--I say this with reverence. My choice is to be a poor man. I could've been a multi-millionaire if I had wanted to be.

Rev. William Branham

**செய்தி**: ***சுயசரிதை,*** 53-1108A

வேதாகமம், "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்கிறவர்கள் யாவரும் துன்பப்படுவார்கள்" என்று கூறுகின்றது. ஆகவே கிறிஸ்துவுக்காக நீங்கள் துன்பங்கள் படவில்லையெனில் அப்படியானால் ஏதோ தவறு ஒன்று இருக்கின்றது.

**செய்தி: எல்லாவற்றையும் விட்டுவிடுதல், ஜனவரி 23, 1962**

# நீங்கள் எதை வாசிக்கிறீர்களோ அதுதான் உங்களுடைய குணாதிசயத்தை உருவாக்குகிறது

~~~~~~~~~~~~~

ஆனால் நான் இதை வாலிப பிள்ளைகளிடம் கூறியாக வேண்டும். ஆபிரகாம் லிங்கன் தாம் 21 வயதைக் கடப்பது வரையில் தம்முடைய ஜீவியத்திலேயே வேதாகமத்தையும், ஃபாக்ஸ் எழுதிய இரத்தசாட்சிகளின் புத்தகத்தையும் தவிர வேறு எந்த புத்தகத்தையும் ஒருபோதும் சொந்தமாகக் வைத்திருக்கவில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? பாருங்கள்? நீங்கள் எதை வாசிக்கிறீர்களோ அதுதான் உங்களுடைய குணாதிசயத்தை உருவாக்குகிறது **(molds)**!

*செய்தி: தாய்மார்களின் தினம்*

~~~~~~~~~~~~~

But I might pass this on to the young people. Do you know Abraham Lincoln never owned a book in his life, until he was after twenty-one years old but the Bible and the Foxe "Book Of The Martyrs." See? what you read molds the character that you are.

MOTHER'S.DAY_ JEFF.IN V-25 N-1 SUNDAY_ 59-0510M

# மத்தேயு

## எழுதின சுவிசேஷத்திலிருந்து
## கேள்விகளும் பதில்களும்

